# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2456/41 - 2025 ඔක්තෝබර් මස 01 වැනි බදාදා - 2025.10.01

*2456/41 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

பணிப்புரை: 95

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டம் (திருத்தியமைக்கப்பட்டது)**

10(1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழான விஷேட பணிப்புரை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 10(1) (ஆ) (ii) இன் கீழ் உரித்தளிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, வியாபாரி எவரும் பாவனையாளர்களுக்கு பொருட்களை விற்பனை செய்யும்போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூலப் பொருட்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொதிகளை இலவசமாக வழங்க முடியாதெனவும், அத்தகைய பொதிகளுக்கு அறவிடப்படும் விலை பாவனையாளருக்கு வழங்கப்படும் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் பணிப்புரை விடுக்கின்றது.

அடர்த்தி குறைந்த பாலிஎதிலின் (Low - Density Polyethylene - LDPE)

அடர்த்தி குறைந்த நேர்த்தியான பாலிஎதிலின் (Linear Low - Density Polyethylene - LLDPE)

அத்துடன், மேற்கூறிய பொதிகளின் விலை வியாபார நிலையத்தில் தெளிவாக விளங்கக்கூடிய வகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் இதன் மூலம் பணிப்புரை விடுக்கின்றது.

**வரைவிலக்கணம்**

பொதிகள் என்பது பொதுவாக "சிலிசிலி பொதிகள்" என்று குறிப்பிடப்படும் கொள்வனவு செய்த பொருட்களை கொண்டு செல்வதற்காக பயன்படுத்தப்படும் கைப்பிடிகள் கொண்ட எந்த பரிமாணத்திலும் உள்ள பொதிகளைக் குறிக்கின்றது. (மத்திய சுற்றாடல் அதிகார சபை)

இப் பணிப்புரை 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி.

**ஹேமந்த சமரகோன்,**
தவிசாளர்.

கொழும்பு,
2025, ஒற்றோபர் 01.

EOG 10-0010